**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 27/2019 and 39/2021** **தேதி: 18.03.2026**

**பி.வா.சா. 1 – தனலட்சுமி**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

எனது பாட்டியின் பெயர் எல்லம்மாள். எனது பாட்டியின் அம்மா பெயரும் எல்லம்மாள் தான். எனது பாட்டியின் அம்மாவின் கணவர் பெயர் தெரியாது. எனக்கு எழுதப்படிக்க தெரியும். எனது பாட்டி தான செட்டில்மெண்டாக 7.1/2 செண்ட் இடம் கொடுத்தார்கள். வா.சா.ஆ 4 ஆவணம் மற்றும் பி.வா.சா.ஆ 1 ஆவணம் எனது பாட்டி எனக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் 4 ம் பக்கத்தில் கடந்த 17.10.1964 ம் தேதியிட்ட அருப்புக்கோட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் 1.892–146–147.1675/1964 யை மூலபத்திரமாக காட்டப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தில் அவ்வாறு தான் உள்ளது. எனது பாட்டி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். தாவா சொத்து விபரத்தில் புஞ்சை செண்ட் 15 ல் தென்புறம் செண்ட் 7.1/2 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது தாத்தா பெயரில் தான் 15 செண்டிற்கு பட்டாவும், UDR நகலிலும் தாத்தா பெயர் தான் உள்ளது. வரைபடத்திலும் அவ்வாறு தான் உள்ளது. எனது பாட்டியின் பாட்டி படிக்காதவர். எனது பாட்டியும் படிக்காதவர். எங்கள் இடத்தை எங்களுக்கே கிரையம் செய்து கொடுத்ததாக எனது தந்தை தாசில்தார் அலுவலகத்திற்கு சென்று பார்த்து வந்து சொன்னார். நான் மேற்சொன்ன சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. தாவா சொத்து அழகர்சாமி நாயுடு பெயரில் UDR ல் பதிவு உள்ளதாக எனது தகப்பனார் சொன்னார். நான் மேற்படி ஆவணத்தை பார்த்தேன். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

நான் சொல்லும் பட்டா மோசடியானது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து மொத்த விஸ்தீரணம் 15 செண்ட் என்றால் சரிதான். மொத்த சொத்தில் 7.1/2 செண்ட் நான் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பாட்டி எல்லம்மாளுக்கு அழகர்சாமி நாயுடு மருமகன் என்றால் சரிதான். தாவா சொத்தின் தென்பகுதியை எனது பாட்டியின் தாயாரான எல்லம்மாளுக்கு கடந்த 17.10.1964 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் ருக்மணியம்மாள் கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எல்லம்மாள் மூத்தவரா அல்லது அவரது மருமகன் அழகர்சாமி நாயுடு மூத்தவரா என்றால் எல்லம்மாள் தான் மூத்தவர். அழகர்சாமி நாயுடு சொந்த ஊர் ராமானுஜபுரம். அழகர்சாமி நாயுடு, எனது பாட்டியான எல்லம்மாளை திருமணம் முடித்த தேதி தெரியாது. திருமணத்திற்கு முன்னால் அழகர்சாமி நாயுடும், எனது பாட்டி எல்லம்மாளும் சொந்தகாரர்களா என்றால் சொந்தகாரர்கள் தான். தாவா சொத்தின் தென்புறம் புஞ்சை செண்ட் 7.1/2 யை எனது பாட்டியின் தாயார் ருக்மணியம்மாளிடம் கிரையம் பெற்றுள்ளார். முழு சொத்தும் எங்களுடையது என்ற நிலையில் 7.1/2 செண்ட் கிரையம் வாங்கியது தவறு என்று சொன்னால் சொத்து பற்றிய விபரம் எனக்கு தெரியாது பாட்டி எழுதிக்கொடுத்த விபரம் தான் தெரியும். எனது பாட்டியின் அம்மா மொத்த சொத்தில் தென்புறம் 7.1/2 செண்டை கிரையம் பெற்று மீதிமுள்ள 7.1/2 செண்ட் வாதிகளுக்கு பாத்தியம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து ருக்மணியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று எனது பாட்டியின் அம்மா எல்லம்மாள் ஒத்துக்கொண்டு கிரையம் வாங்கியதால் நான் தாவா சொத்தில் உரிமை கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல. UDR பட்டாவில் அழகர்சாமி நாயுடு பெயரில் மோசடியாக பட்டா ஏற்பட்டதை எனக்கு சாதகமாக பயன்படுத்தி OS No.39/2021 வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது பாட்டியின் தாயாருக்கு வா.சா.ஆ 2 ஆவணத்தின் படி கிரையம் கொடுத்த பின்பு சுப்பையா அவர்களுக்கு தாவா சொத்தை பொறுத்து அடமானம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி

எனக்கு தெரியாது. வாதி தாக்கல் செய்த பிராதை நான் படித்து பார்த்தேன். பிராதில் மேற்கண்ட விபரம் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது சங்கதிகளை பார்த்த பின்னர் நான் அடமான பத்திரத்தை நகல் எடுத்து பார்க்கவில்லை. நான் எனது பாட்டி எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் சொத்தின் மூல ஆவணம் குறித்து நான் கேள்வி எழுப்ப சட்டப்படி எனக்கு உரிமை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு சொத்து பட்டா மூலம் பாத்தியமா அல்லது செட்டில்மெண்ட் மூலமாக பாத்தியமா என்றால் எனக்கு தெரியாது.

( சாட்சியின் வேண்டுகோளுகிணங்க குறுக்கு விசாரணை தற்காலிமாக ஒத்தி வைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.